# **DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
**OS. No.76/2022 and OS.No.37/2024**

சாட்சி -PW1

பெயர் -திரு.ஜேக்கப்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.08.2026.**

வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் தகப்பனார் சர்ச்சுக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எனது தகப்பனார் தான செட்டில்மெண்டை சியோன் பெந்தஸ்கோஸ் சர்ச்சுக்கு அந்த சமயத்தில் பாதராக இருந்த நல்லய்யா ஆருன் அவர்களுக்கு சர்ச்சுக்காக எழுதிக் கொடுக்கப்பட்ட இடம் தான் தாவா சொத்து 7 1/2 செண்ட் தான் என்றால் சரிதான். நல்லய்யா ஆருன் என்ற தனிப்பட்ட நபருக்காக தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அவர் பெயரில் தான் எழுதிக் கொடுத்தார்.

என் தகப்பனார் சர்ச்சுக்காக எழுதிக் கொடுக்கப்பட்ட தான பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வருடம் 1970 தேதி, மாதம் நினைவில்லை. நல்லய்யா ஆருன் உயிருடன் இல்லை. அவருடைய வாரிசுகள் மீது எந்த வழக்கும் செய்யவில்லை என்றால் அவர் திருமணம் ஆகாதவர். அதற்கான ஆவணத்தை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

இமானுவேல் பால் சியோன் சர்ச்சின் தற்போதைய பாஸ்டர் என்றால் சரிதான். இமானுவேல்பால் பெயரில் தாவா சொத்தை எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவாவை மேற்படி பால் சியோன் சர்ச்சின் பாஸ்டர் இமானுவேல் என்ற முறையில் தாக்கல் செய்துள்ளேனா அல்லது இமானுவேல்பால் தனிப்பட்ட

முறையில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாவாவை இமானுவேல்பால் மீது தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்துள்ளேன். சர்ச்சுக்காக அல்ல. இமானுவேல்பால் தாவா சொத்து 7 1/2 செண்டை சர்ச்சுக்கு பாத்தியப்பட்டது என்று உரிமை கோருக்கிறார் என்றும் அவருக்காக தனிப்பட்ட முறையில் உரிமை கோரவில்லை என்றால் சரிதான்.

இமானுவேல்பாலும் மேற்படி சர்ச்சின் நிரந்தர பாஸ்டர் அல்ல என்றால் சரிதான். அந்த சர்ச்சின் விதிமுறைகள் படி பாஸ்டர் மற்றும் மேனேஜர் மாறுவார்கள். இமானுவேல்பால் சியோன் சர்ச்சுக்காக தான் வழக்கு Represent செய்கிறார் என எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் மேற்படி சர்ச்சுக்கு 1970ல் இரண்டு கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் 5 1/2 செண்ட் கிரைய பத்திரம் பார்த்துள்ளேன். மற்றொரு கிரைய பத்திரத்தை நான் பார்க்கவில்லை. 7 1/2 செண்ட், 5 1/2 செண்ட் வீடு, மேற்படி பத்திரங்களின் நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

என்னிடம் காண்பிக்கபடுவது என்னுடைய தகப்பனார் தாவா சொத்து குறித்து எழுதிக் கொடுத்த தான பத்திரம் என்றால் சரி. மேற்படி பத்திரம் 12.06.1970 என்றால் சரி. (மேற்படி ஆவணம் ஜெராக்ஸ் ஆவணம் என்பதால் சாட்சி மூலம் குறியீடு செய்ய வாதி தரப்பில் ஆட்சேபனை எழுப்பட்டதால் பிரதிவாதி தரப்பில் குறியிடு செய்யப்படவில்லை. பிரதிவாதி தரப்பில் சான்றொப்பமிட்ட நகல் பெற்று மேற்படி ஆவணம் வாதி முலம் குறியீடு செய்து கொள்வதாக கூறப்பட்டது)

<u>மேற்படி ஆவணம் குறியீடு செய்ய பிரதிவாதி தரப்பில் காலஅவகாசம் கோரப்பட்டதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.</u>

The Witness deposed on solemn affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the 13th day of August 2026.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.08.13 06:18:37 +0600

Additional District Judge(FTC),
Vellore.